286—

சொந்தக் கட்டடம்

***4576—திருமதி ஆர். சாந்தி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, தேவராயபுரம் ஊராட்சி, செல்லியம்பாளையம் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் *(ஆ)* நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, எருமப்பட்டி ஒன்றியம், தேவராயபுரம் ஊராட்சியிலுள்ள செல்லியம்பாளையம் பகுதிநேர நியாய விலைக் கடை 426 குடும்ப அட்டைகளுடன் வாடகையின்றி இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இக்கடை செவ்வாய், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் மட்டும் செயல்பட்டு வருகிறது. இக்கடையை நடத்தும் தேவராயபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திடம், இப்பகுதிநேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டத் தேவையான இடமோ, போதிய நிதி வசதியோ தற்போது இல்லை. எனவே, செல்லியம்பாளையம் பகுதிநேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட தற்போது வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

திருமதி ஆர். சாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டடம் கட்டித் தருவதற்கு வாய்ப்பில்லை என்று சொல்கிறார்கள். எனது சேந்தமங்கலம்

2013 ஏப்ரல் 22]

தொகுதியில் ரேஷன் கடை வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. சேந்தமங்கலம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிறது. அந்தத் தொகுதியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் அதிகமாக வசிக்கின்றனர். அந்த மக்களுக்கு நிறைய பணிகள் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், அரசின் நிதியிலிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ரேஷன் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நாமக்கல் மண்டலத்திலே, சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள நியாய விலைக் கடைகளில், ஏறத்தாழ 114 முழுநேரக் கடைகளாகவும், 44 பகுதிநேரக் கடைகளாகவும் இருக்கின்றன. இவற்றிலே 30 முழுநேரக் கடைகள் வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன; பகுதிநேரக் கடைகள் முழுவதும் இலவசக் கட்டடங்களிலும், அரசுக் கட்டடங்களிலும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற நியாய விலைக் கடைக்கு அரசு நிதியினைப் பெற்று கட்டடம் கட்டுவதைக் காட்டிலும், மாவட்ட ஊராட்சி நிதியிலிருந்து பெற்றோ அல்லது மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ கட்டினால் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டுவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. நியாய விலைக் கடைகளையெல்லாம் பொதுவாகவே கூட்டுறவுச் சங்கங்கள்தான் நடத்திக் கொண்டு வருகின்றன. இந்தச் சங்கங்கள் எல்லாம் நலிந்து போயிருக்கின்றன; cumulative loss–ல் இருக்கின்றன. எனவே, அதற்கான சாத்தியக் கூறுகள் குறைவு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.*

திருமதி ஆர். சாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 287, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

287—

பாலம்

***2763—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கை தொகுதி, பெரியகண்ணூர் நாட்டார் கால்வாய் குறுக்கே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

பெரியகண்ணூர் நாட்டார் கால்வாய் குறுக்கே தரைமட்டப் பாலத்திற்கு மாற்றாக, ரூபாய் 3.50 கோடி செலவில் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்தப் பாலம் மேலூர், இராமநாதபுரம் செல்லக்கூடிய நெடுஞ்சாலையில் உள்ளது. அங்கே சிவகங்கை, பரமக்குடி,*